*7*

# கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல்: உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் (பாகம் 1)

## (4:12-19)

*இந்த நிருபத்தில் இதற்கு முன்பு இருமுறை, பேதுரு தமது வாசகர்களின் உபத்திரவங்களை வெளிப்படையாகக் குறிப்பிட்டிருந்தார் (1:6-9; 3:13-17). 4:12ல் உள்ளது போன்றே 1:6-9 வசனப்பகுதியின் மொழிநடையும் "அக்கினியால்" சோதிக்கப்படுதலைப் பற்றிப் பேசுகிறது என்பது உண்மையே. இருப்பினும் பின்வரும் வார்த்தைகள் உபத்திரவம் என்னும் கருத்தைப் புதிய மட்டத்திற்கு எடுத்துச்செல்லுகையில், அவை தெளிவானவையாகவும் அவசரத்தன்மை கொண்டவையாகவும் இருக்கும் வகையில் அவற்றின் மனப்பதிவிற்கு நாம் தப்பித்துக்கொள்ளுதல் என்பது அரிதாகவே உள்ளது.*

### கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல் (4:12-16)

**[12]பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில்
பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,
[13]கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து
மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால்
சந்தோஷப்படுங்கள். [14]நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்
நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய
ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்;
அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்.
[15]ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது,
திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில்
தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது.**

*[16]ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.*

*வசனம் 12.* இவ்வசனங்களில் மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரவங்களின் வலிவுத்தன்மை 1:6-9 வசனப்பகுதியில் இருந்து அதிகம் மாறுபட்டிருப்பதில்லை.[1] அவ்வாறு இதை எடுத்துக்கொண்ட நிலையில் 4:12-16 வசனப்பகுதியின் வார்த்தைகள் 3:13, 14ல் இருந்து கட்டியெழுப்பப்பட்டுள்ள வலிவுத்தன்மையை நிரூபிக்கின்றன என்பது தெளிவாக உள்ளது. 3:13, 14ம் வசனங்களில் பேதுரு தமது வாசகர்கள் தங்களுக்கு உபத்திரவங்கள் வந்தால் திகைப்படைய வேண்டும் என்று கூறினார். "நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்?" என்று அவர் கேட்டார். "ஒருவருமே இல்லை" என்பதுதான் எதிர்பார்க்கப்பட்ட பதிலாக இருந்தது, அப்போஸ்தலர் 3:13, 14ல் நீதியினிமித்தம் உபத்திரவப்படுதலுக்கான சாத்தியக்கூறைத் திறந்ததாக விட்டுவைத்திருக்கையில், அப்படிப்பட்ட ஒரு விஷயம் எதிர்பார்க்க மிகவும் அரிதானது என்பதை அவர் தெளிவாக்கியிருந்தார். இப்போது 4:12ல் அப்போஸ்தலர் அதே வாசகர்களுக்கு, **உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், இருங்கள்** என்று கூறினார். வலியுறுத்தலில் உள்ள மாற்றத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டியுள்ளது? 3:13ல் இருந்து 4:16வரையில் பேதுருவின் சிந்தனை ஓட்டத்தைப் பின்பற்ற மேற்கொள்ளப்படும் நல்ல விசுவாச முயற்சியானது, 3:13, 14 மற்றும் 4:12-16 ஆகியவற்றிற்கிடையே உள்ள மன இறுக்கமானது முதலில் தோன்றுவது போன்று அவ்வளவு பெரிதாக இருப்பதில்லை என்பதைச் செயல்விளக்கப்படுத்தும்.

3:9ல் பேதுரு தமது வாசகர்களை ஒருக்காலும் "தீமைக்குத் தீமை செய்யாமல்" தேவபக்தியுடன் வாழும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் தமது வாசகர்களின் பதில் செயலை முன்னெதிர் நோக்கியிருந்தார். தேவபக்தியுள்ள வாழ்விற்கு மறுசெயலாக அவர்கள் புறதெய்வ வணக்க சமூகத்தில் இருந்து துக்கத்தை மாத்திரமே பெற்றனர். சிலவேளைகளில் அது அப்படி நடக்கலாம் என்று அப்போஸ்தலர் ஒப்புக்கொண்டார், ஆனால் அது சாதாரண எதிர்பார்ப்பாக இருக்கவில்லை. பொதுவாக புறதெய்வ வணக்கம் செய்யும் அயலகத்தவர்கள், இரக்கத்தையும், தனிப்பட்ட நேர்மையையும் சுயகட்டுப்பாட்டையும் மதிப்பார்கள். இருப்பினும், கிறிஸ்தவர்கள் நடக்கத் தேர்ந்துகொண்ட தேவபக்தியுள்ள பாதைக்குப் புறதெய்வ வணக்கத்தாரின் எதிர்ப்பு இருக்கும். கிறிஸ்தவர்கள் தங்கள் பழைய கிறிஸ்தவமற்ற வாழ்வின் குணமான அந்த துன்மார்க்க உளைக்குத் தங்கள் அயலகத்தவர்களுடன் திரும்பாமல் இருக்கும்போது, அவர்கள்மீது புறதெய்வ வணக்கத்தார் வெறுப்புக் கொள்வார்கள் (4:4). பேதுருவின் வாசகர்கள் தழுவிக்கொண்ட பரிசுத்த வாழ்வானது புறதெய்வ வணக்கத்தவரின் துன்மார்க்க உளையைக் குற்றப்படுத்துவதாக இருக்கும் என்பதைப் பேதுரு உணர்ந்தறிந்தார். அவர்களைச் சிலர் வெறுத்து தூஷிப்பார்கள் என்பதே விளைவாக இருக்கும்.

ஒழுக்கரீதியாக நேர்மறையான வாழ்வைத் தழுவிக் கொண்டதைத் தவிர வேறு எதுவும் அதிகமாகச் செய்யாதிருந்தும், கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த சோதனைகளின் காரணம் பற்றி பேதுருவைக்

காட்டிலும் யோவான் அதிகம் வெளிப்படையாக விளக்கம் அளித்தார். காயீன் கொலைசெய்ததைப் பற்றி யோவான் "அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே. என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்." என்று கூறினார் (1 யோவான் 3:12ஆ, 13). இவையாவும் உண்மையாயிருக்கும் நிலையில், கிறிஸ்தவர்கள் தங்களைக் கர்த்தர் அழைத்துள்ள ஒழுக்கக் கொள்கைகளைப் பின்பற்றியதற்காகச் சுய பச்சாதாபப்படும்படிக்கோ அல்லது சமரசம் செய்துகொள்ளும்படிக்கோ சோதிக்கப்படலாம். இவ்விரண்டையுமே பேதுரு அனுமதிக்க மாட்டார். அதனால்தான் அவர் 1 பேதுரு 3:13, 14ல் எழுதியது போன்று இங்கு எழுதினார்.

சாதாரணமாக கிறிஸ்தவர்கள், கனத்திற்குரிய வாழ்வை வாழ்வதற்காகத் துன்புற மாட்டார்கள். கிறிஸ்தவ நடக்கையானது இந்த உலகத்தாரைக் குற்றப்படுத்துவதாக இருந்தாலும் கூட மேற்கூறிய விஷயம் உண்மையானதாக உள்ளது. 3:13, 14ல் உரைக்கப்பட்ட கற்பிதமான சூழ்நிலைக்கு நேரெதிரான வகையில், 4:12ல் அப்போஸ்தலர் தமது வாசகர்களால் கண்டுணரப்பட்டிருந்த கடினமான உண்மை நிலையை நேருக்கு நேர் எதிர்கொண்டார். 2:11ல் அவர் செய்திருந்தது போன்றே இங்கும் அவர் பாசமிக்க சொற்றொடரான **பிரியமானவர்களே** (இது *agapētos* என்பதிலிருந்து வருகிறது) என்பதைக் கொண்டு இப்பகுதியைத் தொடங்கினார். சில நிகழ்வுகளில் கிறிஸ்தவர்கள் சரியானதைச் செய்தமைக்காகத் துன்புற வேண்டும் என்பதை அவர் ஒத்துக்கொண்டார், ஆனால் அது அவர்களின் விசுவாசத்திற்கு அறைகூவல் விடுக்கும் சந்தர்ப்பமாகக் கூடாது. "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே" (4:4) அவர்களின் அயலகத்தவர்கள் ஆச்சரியப்படுதலை அறிந்த நிலையில், அவர்கள் தங்கள்மீது வந்த "பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து" திகைப்படையக் கூடாது.

பேதுருவின் வாசகர்களுடைய உபத்திரவம் பற்றிய அவரது சித்தரிப்பிற்கும், இரண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்திருந்த பிளீனி என்ற ரோமானிய அலுவலரின் பதிவேட்டிற்கும் இடையில் ஆர்வத்திற்குரிய ஒற்றுமைகள் உள்ளன. இவர் வழக்கமாக இளைய பிளீனி என்று குறிப்பிடப்பட்டார், இது அவரது சிற்றப்பாவும் அவரது சமகால புவியியல் வல்லுனருமான மூத்த பிளீனி என்பவரில் இருந்து இவரை வித்தியாசப்படுத்திற்று. பித்தினியா என்ற ரோம ஆட்சிக்கு உட்பட்ட பகுதிக்கு, பேரரசர் ட்ரேஜன் என்பவரால், இளைய பிளீனி அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார், அங்கு சென்று அவர் அந்த நகரங்களில் நிதிநிலைகளையும் உள்விவகாரங்களையும் முறைப்படுத்த வேண்டியிருந்தது, பிளீனி அவர்கள் ஆளுநர் என்ற வகையில் தமது கடமைகளைச் செயல்படுத்திக் கொண்டிருந்தபோது, தாம் சந்தித்த அறைகூவல்களை விவரித்தும் அறிவுரை வேண்டியும் பேரரசர் ட்ரேஜனுக்கு பல கடிதங்கள் எழுதினார். அவரது கடிதங்கள் ஒன்றில் அவர், கிறிஸ்தவ அச்சுறுத்தல் என்ற வகையில் தாம் கண்டவற்றை விவரித்தார்.[2]

புறதெய்வ வணக்கக் கோவில்கள் கவனிக்கப்படாமலும் அடிக்கடி பயன்படுத்தப் படாமலும் இருந்த சூழ்நிலையைப் பிளீனி எதிர்கொண்டார்,

புறதெய்வ வணக்கத்தவர்களில் மிகப்பலர் கிறிஸ்துவினிடமாய் திரும்பி இருந்ததால் அந்த புண்ணியத்தலங்கள் பழுதடைந்து வீழ்ந்திருந்தன. கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடுவதைக் தாம் தடுத்திருந்ததாக ஆளுநர் அவர்கள் ட்ரேஜனுக்குக் கூறினார். அப்போது புறதெய்வங்களின் கோவில்களில் மறுபடியும் அடிக்கடி மக்கள் கூடுவதைக் கண்டு அவர் ஊக்குவிக்கப்பட்டார். இருப்பினும், குறிப்பிட்ட குற்றம் எதையும் கிறிஸ்தவர்கள் செய்தனர் என்று தாம் கண்டறிய இயலாததால், அவருக்கு பேரரசரிடம் இருந்து அறிவுரை தேவைப்பட்டது. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொள்ளுதல் என்பது தன்னிலேயே போதுமான குற்றமாயிருந்ததா? ஒருவர் கிறிஸ்தவராக இருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டபோது, அவர் குற்றப்படுத்தப்பட்டவரைத் தமக்காகப் பேசும்படி கேட்டுக்கொண்டார். அவர் கிறிஸ்தவராக இருப்பதை மறுத்தால் அல்லது தாம் கடந்த காலத்தில் கிறிஸ்தவராக இருந்ததாகவும் இப்போது அப்படியில்லை என்றும் கூறினால், அவர் செசார் ராயனை வழிபடும்படி பிளீனி கேட்டுக்கொண்டார், அவ்வாறு செய்தவுடன் அவர் விடுதலை செய்யப்படுவார். குற்றம் சாட்டப்பட்டவர் தாம் ஒரு கிறிஸ்தவராக இருப்பதாக அறிக்கை செய்தால் பிளீனி தமது கேள்வியை மூன்று முறை திரும்பத் திரும்பக் கேட்பார் - குற்றம் சாட்டப்பட்டவர் மறுப்பு எதுவும் தெரிவிக்காதிருந்தால், அவரைத் தூக்கிலிடும்படி ஆளுநர் ஆணையிடுவார்.

பிளீனியின் கடிதம் 1 பேதுரு நிருபம் எழுதப்பட்டு வெறும் ஐம்பது ஆண்டுகள் பிற்பாடு எழுதப்பட்டதாகத் தேதி இடப்பட்டுள்ளது. மேலும் பேதுருவின் நிருபத்தினுடைய முதல் வாசகர்கள் வாழ்ந்திருந்த அதே ம ாகாணப்பகுதிகள் ஒன்றில் இருந்து எழுதப்பட்டிருந்தது. ஆளுநரின் கடிதம் கேள்விகளை எழுப்பப் கருத்துக் கொடுக்கிறது. மற்ற ரோம ஆளுநர்கள் அங்கிருந்தனரா? அல்லது பிளீனியைப் போன்றே அதே நடவடிக்கைகளை உள்ளூர் நகர அலுவலர்கள் மேற்கொண்டிருந்தனரா? எந்த வேளையில் கிறிஸ்தவமானது குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக ஆளும் அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டது? பிளீனி விவரித்தது போன்று அவ்வளவு கடுமை யான அலுவர்களின் துன்புறுத்துதல் நடந்த ஒரு சூழ்நிலையைப் பேதுரு குறிப்பிட்டிருக்கச் சாத்தியக்கூறும் இல்லாதிருக்கையில், ஆளுநரின் கடிதம், புறதெய்வ வணக்க சமூகமானது கிறிஸ்தவர்களை மதிக்க வந்த வழியைப் பற்றி, ஆர்வத்திற்கு உரிய ஒரு உட்கண்ணோக்கை நமக்குத் தருகிறது. அவர்கள் நிலைநாட்டப்பட்டிருந்த மதங்களுக்கு அந்நியராக, அவற்றைத் தகர்ப்பவர்களாக மற்றும் ஒரு அச்சுறுத்தலாக இருந்தனர். அவர்களின் வழிகள் ஒதுங்கி நிற்கும் போக்குள்ளவையாகவும் குற்றப்படுத்துபவையாகவும் இருந்தன. இந்த புதிய மார்க்கம் அல்லது புறதெய்வ வணக்க அலுவர்கள் கண்ணோக்கியபடி இந்த மூடநம்பிக்கை பொருத்தமாகவில்லை.

பேதுருவின் வாசகர்களால் சந்திக்கப்பட்ட “பற்றியெரிகிற அக்கினி” என்பது ஒன்றுக்கு மேற்பட்ட முன்னணியில் இருந்து வந்திருக்க வேண்டும் என்று பிளீனியின் கடிதம் கருத்துத் தெரிவிக்கிறது. ஒருபுறத்தில், அது சபையுடன் மங்கலான பழக்கம் மாத்திரமே வைத்துக் கொண்டிருந்த உள்ளூர் மக்களினால் சுட்டிக்காட்டப்பட்டமையும் அலுவலகரீதியற்ற சகிக்காத தன்மையையும் உள்ளடக்கி இருக்க வாய்ப்பு இருந்தது. இதற்கு மறுபுறத்தில், அலுவலகத் துறைகளில் இருந்து அடக்கு முறையும் இதில்

உள்ளடங்கி இருக்கலாம். அது கூறப்பட்ட நிலையில், கிறிஸ்தவர்களைக் குறித்து அலுவலக ரீதியான ரோமானியக் கொள்கை எதுவும், குறைந்தபட்சம் இந்த முந்திய தேதிக்காலத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை. சந்தேகத்திற்குரிய கிறிஸ்தவர்களை செசார் ராயனின் சிலைக்கு முன்பாக வந்து பலி செலுத்தும்படி பிளீனி கேட்டுக்கொண்டபோது, அவர் தமக்கு முன்னிருந்தவர்களின் உதாரணத்தைப் பின்பற்றி இருக்கலாம், ஆனால் அவர் இந்த நடைமுறையைத் தொடங்கியிருக்கவும் சாத்தியம் உள்ளது.

பேதுரு தமது வாசகர்களின் உபத்திரவங்களை 1:6-9ல் மேற்கொண்டு வந்தபோது, அவர்கள் "(தங்களின்) விசுவாசம் சோதிக்கப்படுவதற்காக" துன்பங்களை அனுபவித்திருந்தனர் என்று கூறினார். இவ்விடத்திலும் கருத்து அதேபோன்றே உள்ளது. அப்போஸ்தவரின் வாசகர்கள் சந்தித்த "பற்றி எரிகிற அக்கினி" அவர்களை **சோதிக்கும்படி** இருந்தது என்று அவர் கூறினார். அவர்களுக்குத் துன்பங்களைத் தேவன் எதேச்சையாக அனுப்பவில்லை. மாறாக விசுவாசிகள் முன்பு இருந்ததைக் காட்டிலும், விசுவாசத்தில் அதிக திடன் கொண்ட கிறிஸ்தவர்களாவும் தாங்கள் தேர்ந்துகொண்ட வாழ்விற்கு அதிகம் ஒப்புக்கொடுத்தல் உள்ளவர்களாகவும் ஆகும்படிக்கே சோதனைகள் வர தேவன் அனுமதித்தார். அவ்வகையில்தான் அது அவர்களை **"சோதிக்கும்படி"** இருந்தது. அவர்கள் சோதனையின் மூலம் சோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு வெளிவந்தனர். பேதுருவின் வாசகர்கள் தங்கள் சோதனைகளைப் பின்வரும் இருகாரணங்களினிமித்தம் **புதுமையென்று** கருதக்கூடாதிருந்தது: (1) அவர்கள் வாழ்வின் நற்தன்மையானது புறதெய்வ வணக்கத்தவர்களின் கவனமற்ற வாழ்விற்காக அவர்களைக் குற்றப்படுத்துவதாக இருந்தது. (2) அவர்களின் விசுவாசம் சோதிக்கப்பட்டு, சகலமும் பலம்பொருந்தியதாகும்படிக்கு சோதனைகளைத் தேவன் அனுமதித்தார்.

**வசனம் 13.** இயேசு வாழ்ந்த வாழ்வைத் தழுவிக்கொள்ளுதல் என்பது துன்புறுதலை இணைவுபடுத்தி இருக்கும் என்பது கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கும் ஒருவிஷயம்தான். இயேசு, **"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:11). பவுல், "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்"** என்று கூறினார் (கொலோசெயர் 1:24). மேய்ப்புப்பணியில் அவர் வகைப்பாடு கொண்டுள்ளார்: **"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"** (2 தீமோத்தேயு 3:12). தேவனுக்குப் பிரியமான வாழ்வை வாழ்வதை இயேசு தேர்ந்து கொண்டதால், தேவபக்தியற்ற மக்களிடம் இருந்து வந்த துன்பத்தை இயேசு அனுபவித்தார் என்றால், அவரைப் பின்பற்றுபவர்கள் அதேபோன்று துன்புறுதலை எதிர்பாராது இருத்தல் அரிது. "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப் படுத்துவார்கள் …" (யோவான் 15:20). துன்புறுதல் சந்தோஷத்திற்கு வலுக்கூட்டுகிறது

*என்று பேதுரு உரிமைகோரினார், அது சந்தோஷத்தை ஒருக்காலும் குறைப்பதில்லை. எனவே பேதுரு* ***அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள் என்று*** *எழுதியதில் வியப்பு எதுவும் வருவதில்லை.*

*நடபடிகள் 1:7ல் உள்ளபடி, பவுலின் வாசகர்கள் கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவங்கள், அவர்கள் கிறிஸ்துவுக்குப் பங்காளிகளாக இருந்தனர் என்பதற்கு உத்தரவாதமாக இருந்ததாக அவர்களுக்குப் பவுல் நினைவூட்டினார். அவரோடு பாடுபடுதல் என்பது,* ***கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக*** *வகை ஏற்படும் என்பதற்கு ஒரு உறுதிப்பாடாக இருந்தது. இங்கு அப்போஸ்தலர் "களிகூர்ந்து" "மகிழும்படியாக" என்று இருவிதம ாக அவ்வார்த்தையைப் பயன்படுத்தினார், அப்போது* ***"கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக"*** *இருக்கும் என்று அவர் கூறினார். இருப்பினும் இந்த யுகத்தில் விசுவாசி அனுபவிக்கும் சந்தோஷம், கர்த்தர் வெளிப்படும்போது அனுபவிக்க இருக்கும் சந்தோஷத்துடன் ஒப்பிடப்படுதல் மிகவும் அரிதாகும். பேதுரு வினைச்சொற்களைக் குவித்தார். கர்த்தர் மறுபடியும் வரும்போது, சந்தோஷம் என்பது ஏராளமான சந்தோஷமாக -* ***மகிழும்படியாக*** *இருக்கும். இங்கு மாத்திரம் அல்ல, ஆனால் மத்தேயு 5:12 லும் வெளிப்படுத்தின விசேஷம் 19:7 லும்* ***"களிகூர்ந்து"*** *(chairō) மற்றும்* ***"மகிழும்படியாக"*** *(agalliaō) என்ற வினைச்சொற்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.* ***"மகிழும்படியாக"*** *என்பது "சந்தோஷமாயிருத்தல்" அல்லது "மிகவும் மகிழ்வடைதல்" என்றும் கூட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*சந்தோஷம் என்பது பேதுரு தமது வாசகர்கள் அனுபவிக்க வேண்டும் என்று விரும்பிய ஒரே உணர்வாக மிகவும் அரிதாக இருந்தது. வெற்றியும் கூட அங்கு இருந்தது. உபத்திரவத்தில் இயேசு வெற்றி கொண்டது போல, விசுவாசியும் வெற்றிகொள்ளுவார். ஏராளமான சந்தோஷம் என்பது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டபோது கிடைத்த பேரம்பேச இயலாத வெற்றியின் உற்பத்திப் பொருளாக உள்ளது, தற்கால யுகத்தில் உபத்திரவத்தில் உணர்ந்தறியப்படும் சந்தோஷமாக இருந்தாலும் அது மகிமையின் முன்சுவையாக உள்ளது. கிறிஸ்தவர், பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் மீது வெற்றி பெற்ற சந்தோஷத்தில் கிறிஸ்துவுடன் ஏற்கனவே பங்காளியாக இருக்கிறார், இருப்பினும், இன்னும் வந்திராத அதிகமான சில விஷயங்கள் உணர்ந்தறியப்பட வேண்டியவையாக உள்ளன. விசுவாசிகள், "அவருடைய மகிமை வெளிப்படுதலின் எதிர்பார்ப்பிலும், அவர்களின் மகிழ்ச்சியின் உச்சகட்ட முடிவிலும் வாழ்கிறார்கள்". பவுல்* ***"... கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்"*** *என்று எழுதியபோது, அவரது சிந்தனை பேதுருவின் சிந்தனையில் இருந்து தூரத்தில் நீக்கிவைக்கப்படவில்லை (ரோமர் 8:17).*

***வசனம் 14.*** *உபத்திரவப்படுதல் என்பது அதினிமித்தமாகவே ஒரு நெறிமுறையாக உள்ளது என்று சில கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் போதித்துள்ளன. துன்புறுதலினாலோ அல்லது சந்தோஷமான விஷயங்களை மறுத்தலினாலேயோ ஒருவர் அதனிமித்தமாகத் தமது பரிசுத்த தன்மை*

யை உயர்த்திக்கொள்ளலாம் என்பதற்கான குறிப்பு எதையும் பேதுரு தரவில்லை. ஒருவர் கிறிஸ்துவை அறிந்து, இவ்வாறு கனத்திற்குரிய மற்றும் நேர்மையான வாழ்வை வாழும்போது, அவர் **கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால்** அவர் சந்தோஷப்படலாம். இந்த உலகத்தின் ஓட்டத்தைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்தவர்களைப் பற்றிப் பொல்லாத விஷயங்களைப் பேசுகிறபோது, தேவனுடைய மக்கள்மீது சாட்டத் தகுதியற்ற குற்றச்சாட்டுகளை அவர்கள்மீது கூறுகிறபோது, அவர்கள் கிறிஸ்தவர்களின் கர்த்தரை நிந்திக்கையில் கிறிஸ்தவர்களை நிந்திக்கும்போது, இவ்விதமான விஷயங்களைக் கிறிஸ்தவர்கள் சகிக்கும்போது, அங்கு பாக்கியம் உள்ளது.

**"கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்"** என்ற சொற்றொடர் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. பழங்கால மக்களுக்கு, ஒரு நாமம் என்பது வசதியான பட்டி மற்றும் பழக்கப்பட்டவர் மீது தொங்குவது என்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாக இருந்தது. இன்னொருவர் நாமத்தில் எந்தச்செயலையும் செய்தல் என்பது, அந்த நாமம் குறிக்கப்பட்ட நபரை அந்த நடவடிக்கைக்குள் கொண்டுவருதலாக இருந்தது. யாரேனும் ஒருவருடைய நாமத்தைப் பயன்படுத்தி சாபம் ஒன்றைக் கூறுதல் என்பது, அந்த சாபம் எழுப்பிய விளைவைக் கொண்டுவருதலுக்கு வல்லமையை வலுவாய் வெளியிடுதலாக இருந்தது என்று அவர்கள் நம்பினர். நாமங்கள் ஒரு உருவத்தை எழுப்புதலைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்தன; ஒரு நாமம் என்பது சில மாயாவாத வழியில் ஒருவரின் சொந்த நபர்த்துவத்தின் விரிவாக்கமாக இருந்தது. இந்த உலகக் கண்ணோட்டத்தின்படி நினைத்தால், "கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால்" என்பது கிறிஸ்துவுக்காக நிந்திக்கப்படுதலாக இருந்தது.

செல்வந்தர்களைப் பற்றி, "உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?" என்று கேள்வி எழுப்பியபோது பேதுருவைப் போன்று யாக்கோபுவும், நாமத்துடன் முக்கியத்துவத்தைப் பற்றி விவரித்தார் (யாக்கோபு 2:7). வேதாகம எழுத்தாளர்கள் ஒரு நாமத்துடன் அவர்கள் இணைத்த முக்கியத்துவத்தில் தனிமையாயிருப்பதில்லை. இளைய பிளீனி, கிறிஸ்தவர்கள் செய்திருந்த குற்றங்களுக்காக அவர்கள் குற்றம் சாட்டப்பட வேண்டுமா, அல்லது அவர்கள் அந்த நாமத்தைத் தரித்திருந்ததே போதிய அளவு குற்றமாக இருந்ததா என்று அறிய விரும்பினார் (4:12ன் மீதான் விளக்கங்களைக் காணவும்). பேதுரு தமது வாசகர்களுக்குப் பழக்கமான, புறதெய்வ வணக்கக்காரர்கள், அந்த நாமத்தை அவர்கள் (கிறிஸ்தவர்கள்) சூடிக்கொண்டிருந்த விஷயத்தினாலேயே குற்றப் படுத்தப்பட்டதாக உணர்ந்ததாகப் பேதுரு மறைமுகமாகக் குறிப்பிட்டார். இப்படிப்பட்ட மக்களைப் பற்றி முன்னதாக அவர், "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" என்று கூறியிருந்தார் (4:5). தேவபக்தியுள்ள விசுவாசிகள் "கிறிஸ்துவின் நாமத்தை" சூடிக்கொண்டதற்காக நிந்திக்கப்படும்போது, அதில் ஆசீர்வாதம்/பாக்கியம் இருந்தது.

4:14ன் கடைசிப்பகுதி, ஆங்கில மொழிபெயர்ப்பில் வாசகர்களுக்கு மென்மையானதாக இருந்தாலும், கிரேக்க மொழியில் இது அழகற்ற சொற்றொடராக உள்ளது. நேரடி அர்த்தத்தில் இது, "மகிமையும் ஆவியானவரும் உங்கள்மேல் தங்கியிருப்பதால்" என்று கூறுகிறது. இங்கு

"the" (*to*) என்பது நடுநிலை ஒருமைச் சுட்டுச் சொல்லாக உள்ளது. இங்கு "மகிமையின் விஷயமும் தேவனுடைய ஆவியானவரும்" என்பது கருத்தாக இருக்கலாம். மற்ற மொழிபெயர்ப்புகளுடன் [மற்றும் தமிழ்] வேதாகமமும், சுட்டுச்சொல் திரும்ப வருதலைப் புறக்கணித்தல் மூலமாகவும் **தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்** என்று தரவழைத்தல் மூலமாகவும் இலக்கணரீதியான பிரச்சனையைத் தீர்த்து வைக்கிறது. முந்திய எழுத்தாளர் ஒருவரால் ஒருவேளை இந்தக் கூடுதல் சுட்டுச்சொல் சேர்க்கப்பட்டது எனலாம். அது பெரும்பாலான மெ ாழிபெயர்ப்புகளின் யூகமாக உள்ளது, ஆனால் கையெழுத்துப்பிரதிகளின் ஏராளமான ஆதாரம் இவ்விரு சுட்டுச்சொற்கள் இங்கிருப்பதை ஆதரிக்கிறது.

"தேவனுடைய மகிமையும் அவரது ஆவியானவரும் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்" என்று இந்த வார்த்தைகள் தரவழைக்கப்பட வேண்டும் என்று எட்வர்டு கோர்டன் செல்வின் அவர்கள் வாதிட்டுள்ளார்.[3] அவர், இந்தச் சொற்றொடரைப் பேதுரு யூத சமயப்பற்றின்மீது வரைந்தார் என்ற கருத்தைப் பராமரித்தார். பேதுருவின் காலத்திற்கு முன்னர் இருந்த ரபீக்கள், அசாதாரணப் பரிசுத்த விஷயங்களில் தேவனுடைய தெய்வீகப் பிரச்சன்னத்தைக் குறிப்பதற்கு *Shekinah* என்ற வார்த்தையை உருவாக்கி இருந்தனர். மோசே தமது கரங்களில் நியாயப்பிரமாணம் எழுதப்பட்ட கற்பலகையைத் தூக்கிக்கொண்டு, சீனாய் மலையில் இருந்து இறங்கி இஸ்ரவேல் மக்கள் பாளையம் இருந்த இடத்திற்குத் திரும்பி வந்தபோது, அவரைச் சுற்றிலும் தேவனுடைய *Shekinah* சூழ்ந்திருந்ததாகக் கூறப்பட்டது (காண்க யாத்திராகமம் 34:29, 30). பேதுருவின் வாசகர்கள்மீது தேவனுடைய சொந்த மகிமையுள்ள பிரசன்னமும் தேவனுடைய ஆவியானவரும் இருந்தனர் என்று பேதுரு கூறினார் என்பதாக செல்வின் விவாதித்தார்.

இதற்கு மறுபுறத்தில் மிக்காயேல்ஸ் அவர்கள், கிறிஸ்துவுக்குப் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படும் ஏசாயா 11:1, 2 வசனங்களில் இருந்து மொழிநடையைப் பேதுரு இங்கு கிறிஸ்தவர்களுக்குத் தழுவியமைத்தார் என்ற கருத்தைப் பராமரித்தார்.[4] செல்வினின் விளக்கத்திற்கு, ரபீத்துவ விளக்கப்பள்ளிகளில் பேதுரு நேர்த்தியாக இணைக்கப்பட்டிருத்தல் தேவைப்படுகிறது, ஏனெனில் அங்குதான் சிறிதளவு இதற்கு ஆதரவு உள்ளது. மிகாயேலின் விளக்கத்திற்கு, ஏசாயா 11:1, 2ல் மேற்கொள்ளும் கிறிஸ்தவ விளக்கத்தைப் பேதுரு கணிசமான அளவு மாற்றியிருத்தல் தேவைப்படுகிறது, இது உய்த்துணரக்கூடிய மிகச்சிறந்த தீர்வாக உள்ளது. பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகளின் நடைமுறையைப் பின்பற்றுதல் என்பதே இந்தப் பிரச்சனைக்கு அதிக திருப்திகரமான தீர்வாக உள்ளது. இந்த வாசிப்பில், வசனப்பகுதிக்குள் வந்த இரண்டாவது சுட்டுச்சொல் தொடக்ககாலப் பிரதி எடுப்பவர் ஒருவரால் தவறாய் உட்செருகப்பட்டதாக உள்ளது.

கிறிஸ்துவினிமித்தம் ஒரு விசுவாசி கடிந்துகொள்ளப்படும்போது அல்லது நிந்திக்கப்படும்போது, அவர்மீது ஏதாவது ஒருவகையில் அல்லது விஷயங்களின் சாதாரண நிலைக்குச் சற்று அளவு அப்பால், தேவனிடத்தில் இருந்து தயவு அல்லது ஆசீர்வாதம் வந்திறங்கும் என்று பேதுரு கூறுவதாகக் காணப்படுகிறது. ஒருவேளை அவர், கிறிஸ்தவரின் ஆவிக்குரிய

ஆதாரவளங்களுக்கான தேவை வளருகையில், அந்தக் தேவைகளை அளிப்பதற்குத் தேவன் பிரசன்னமாகிறார் என்று அர்த்தப்படுத்தி இருக்கலாம். தேவன் தமது மக்களிடம் கீழ்ப்படிதலுக்கான கட்டளை இடுதல் மட்டுமின்றி, அவர்கள் கீழ்ப்படிதலுடன் இருப்பதற்கு வல்லமையையும் அவர்களுக்கு அவர் அளிக்கிறார். மனிதருடைய ஆவி மற்றும் தேவனுடைய ஆவி ஆகியவற்றிற்கு இடையில் இருக்கும் உள்விளையாட்டின் மனோதத்துவம் விளக்கத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது, ஆனால் வாக்குத்தத்தம் தெளிவாக உள்ளது. அதே வேளையில், எந்தக் கிறிஸ்தவரும் தம்மை, தமது சொந்த உருவாக்கமான பாவத்தின் வலையிலிருந்து தேவனுடைய கிருபை சிக்கறுத்துக் காக்கும் என்று தவறாக யூகித்துவிடக்கூடாது. மனித பொறுப்பும் தேர்வும், தேவனுடைய ஆவியுடன் விசுவாசிக்குள் எவ்வாறு இடையிடுகிறது என்பது தேவனுடைய ஞானத்திற்கு விடப்பட்டுள்ள விஷயங்களில் இன்னொன்றாக உள்ளது.

***வசனம் 15.*** இந்த நிருபம் முழுவதிலும் பேதுரு, தமது வாசகர்கள், பொல்லாங்கான குற்றச்சாட்டு எதுவும் தங்களுக்கு எதிராகச் சாட்டப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டுவிடாதபடிக்கு அவ்வளவு முன்னுதாரணமான வாழ்வை வாழ வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார் (2:12, 20; 3:17), மனித பலவீனம் தனது நிலையில், அவமானப்படுத்தப்படும்போது அல்லது புறங்கூறப்படும்போது, அதே வகையில், திருப்பித்தாக்குதலையே இயல்பாகக் கொண்டுள்ளது. முன்னதாகப் பேதுரு, இயேசுவின் உதாரணத்தைச் சுட்டிக்காண்பித்திருந்தார். அவர் வையப்பட்டபோது, "பதில் வையாமலும், ... தம்மை ஒப்புவித்தார்" (2:23). மேலும் கிறிஸ்துவுக்கென்று மனமாறிய ஒவ்வொருவரும், பரிசுத்தத்திற்கான தமது உறுதிப்பாட்டை விரும்பத்தக்க அளவு தீவிரமானதாக எடுத்துக்கொள்வார் என்பது சாத்தியமற்றதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் குற்றமறியாது இருக்கையிலேயே துன்புறும்போது, அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தைச் சொந்தமாக்கிக் கொண்டதற்காகவும் கர்த்தருடைய உரிமை வேண்டு கோள்களின்படி வாழ்ந்திருந்தமைக்காவும் துன்புறும்போது, அங்கு மகிமை உள்ளது. இருப்பினும், கிறிஸ்தவர்கள் என்று அறிவித்துக்கொண்டு, கிறிஸ்துவுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு, அவர்கள் தங்கள் பொல்லாத நடக்கையை நியாயப்படுத்துதல் என்பது வெட்கக் கேடானதாக உள்ளது. "நீங்கள் உலகத்திற்கு முன்வைக்கும் உங்கள் உதாரணம் பற்றி உணர்வுள்ளவர்களாக இருங்கள்" என்றே பேதுருவின் வார்த்தைகள் மறைமுகமாய் உணர்த்துகின்றன. "நீங்கள் தவறு செய்யும்போது, உங்கள் உதாரணம் விசுவாசிகளின் முழு அமைப்பையும், மற்றும் அவ்விஷயத்தில் கர்த்தரையேகூட பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பதை நினைவில் வையுங்கள்."

பேதுரு திட்டவட்டமாகக் கூறினார். கிறிஸ்தவர்கள் குற்றப்படாதிருக்க வேண்டிய நான்கு விஷயங்களின் பட்டியலை அவர் இங்கு அளித்தார். இந்தப்பட்டியலில் உள்ளடங்கியுள்ள செயல்களின் விரிவளவு குழப்புவதாக உள்ளது. **உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது,** என்று அப்போஸ்தலர் எழுதினார், இங்கு கூறப்பட்டுள்ள, கொலை மற்றும் திருட்டு என்ற பாவங்கள், இவற்றைக் குறிப்பிடுதல் அவசியம் என்று அரிதாகவே காணப்படுகிற, வெறுக்கத்தக்க பாவங்களாக உள்ளன.

கிறிஸ்தவர்களிலேயே மிகவும் கவனக்குறைவாக இருப்பவர் எவராவது கூட, கொலையையும் திருட்டையும் நியாயப்படுத்த முயற்சி செய்வாரா? **பொல்லாங்கு செய்தவனாயாவது** என்ற மூன்றாவது விஷயம் சிறிதளவே அர்த்தத்தை தருகிற அளவுக்கு மிகவும் பொதுவானதாக உள்ளது. நான்காவது விஷயமான **அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது** என்பது பேதுருவினால் சொல்லுருவாக்கம் செய்யப்பட்டதாக இருக்கலாம். இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்திற்கு முந்திய கிரேக்க இலக்கியங்கள் எதிலும் இது காணப்படுவதில்லை. பேதுரு இந்த நிருபத்தை எழுதி இரண்டு நூற்றாண்டு களுக்குப் பின்பு, இவ்வார்த்தை "அநாவசியமாகத் தலையிடுபவர்" என்பதை அர்த்தப்படுத்துவதற்கு சில முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இங்கு பேதுரு அர்த்தப்படுத்தியது என்ன என்பது உறுதியான வெளிப்பாட்டிற்குத் தொலைவில் உள்ளது.

இது சிறிதளவே முக்கியத்துவம் கொண்டிருக்கலாம், ஆனால் [மூலமொழி வேதாகமத்தின்படி] பேதுரு "as" *(hōs)* என்ற வார்த்தையைக் கடைசி விஷயத்திற்கு முன்னர் திரும்ப எழுதினார், பிற மொழிபெயர்ப்புகளில் இது பெரும்பாலும் பிரதிபலிப்பதில்லை. ஒருவேளை இது நாகரீகபாணியாக மாத்திரம் உள்ளது எனலாம், ஆனால் "as" என்ற வார்த்தை திரும்ப எழுதப்படுதல் என்பது, பேதுரு தமது வாசகர்கள் இவ்விஷயத்தில் விசேஷித்த கவனம் செலுத்தவேண்டும் என்று விரும்பியதாக அர்த்தப்படலாம். உண்மையில் முதல் மூன்று விஷயங்களின் இயக்க இயல்பு, அவைகள் ஜன்னல் உடைகளாக இருந்தன, இவற்றின் தோழமையில் அவர் கடைசி வார்த்தையைப் பொருத்த விரும்பினார் என்று சுட்டிக்காண்பிக்கலாம். பேதுருவின் வாசகர்களில் யாரும் **"அந்நியகாரியங்களில் தலையிட்டுக்கொண்டவ"**ராக இருக்கக் கூடாது என்பதை அவர்கள் கவனிக்கும்படி அப்போஸ்தலர் விரும்பினார் என்பது உண்மையான விஷயமாக உள்ளது. மற்ற மொழிபெயர்ப்புகளில் "meddler" (NIV) மற்றும் "mischief maker" (NRSV) என்றுள்ளன.

பேதுருவின் நான்காவது வார்த்தையான **"அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது"** என்பது, *allotriepiskopos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. இது இரண்டு கிரேக்கவார்த்தைகளில் இருந்து தரவழைக்கப்பட்ட ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தையின் முதல் பகுதியானது, ஒரு பொருளை யாருக்கேனும் உரியது என்ற வகையில் விவரிக்கும் பெயர் உரிச்சொல் என்ற வகையில் உள்ள *allotrios* என்ற சொல்லில் இருந்து கடன் பெறப்பட்டுள்ளது. மாற்று வகையில் இது, அயல் நாட்டவராக அல்லது விரோதியாகக் கூட இருக்கும் ஒருவரையும் குறிக்கலாம். இவ்வார்த்தையின் இரண்டாவது பகுதியான *episkopos* என்பது, 1 பேதுரு 2:25ல் "கண்காணி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிலிப்பியர் 1:1; 1 தீமோத்தேயு 3:2 மற்றும் வேறொரு இடம் ஆகியவற்றில் இவ்வார்த்தையை KJV வேதாகமம் "bishop" என்று மொழிபெயர்க்கிறது. NASB மற்றும் NIV ஆகிய வேதாகமங்கள் இதை "*overseer*" என்று தரவழைக்கத் தேர்ந்துகொள்கின்றன. கிரேக்க இலக்கியத்தில் *episkopos* என்பவர், வெற்றிகொண்டவரின் சார்பாகக் கண்காணிக்கும்படி அல்லது வழக்கத்தில் இருந்த அரச கட்டளையை நிறைவேற்றும்படி ஒரு சூழ்நிலைக்குப் பொறுப்பாளராக

நியமிக்கப்பட்ட நபராக இருந்தார். அவர் படையெடுத்தலினால் அல்லது ஒரு பூமி அதிர்ச்சியினால் அழிக்கப்பட்ட ஒரு நகரத்திற்குப் பொறுப்பாளராக வைக்கப்படலாம். அவ்விடத்து அரசுப்பணியையும் நகரத்தின் கட்டுமானங்களை மறுபடியும் கட்டியெழுப்புதலையும் கவனித்தல் என்பது அவரது பொறுப்புப்பணியாக இருக்கும்.

இவ்விரு சொற்றொடர்களையும் இணைத்ததன் மூலம் பேதுரு, தமது வாசகர்கள் தங்கள் சொந்த அலுவல்கள் மீது சிந்தையாயிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி கூறியிருக்கலாம். ஒருவேளை அவரது வாசகர்கள் அதிகமான வைராக்கியம் உள்ளவர்களாக, தெருமுனைகளிலும் பொது இடங்களிலும் நின்று கொண்டு, தங்களைச் சுற்றிலும் அவர்கள் கண்ட விக்கிரக ஆராதனையையும் ஒழுக்கவீனத்தையும் சபித்திருக்கலாம். "தங்களைத் தாங்களே பொதுஜன ஒழுக்கத்தின் பாதுகாவலர்களாக ... கருதிய கிறிஸ்தவர்களை அவர் அறிந்திருக்கலாம்."[5] இப்படிப்பட்ட நடக்கையானது, புறதெய்வ வணக்கத்தாரின் எதிர்ப்பை நன்கு வலுப்படுத்தியிருக்கும். அது விசுவாசிகளுக்கு அநாவசியமான பாடுகளை விளைவித்திருக்கும். இருப்பினும், *allotriepiskopos* என்ற வார்த்தை **"பொல்லாங்கு செய்தவனாயாவது"** அல்லது **"அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது"** என்ற வார்த்தையுடன் ஒப்பிடும்போது, சார்பளவில் அதிகம் பவமானதாக இருக்கலாம். இவ்வார்த்தை கலகம் செய்பவர், களங்கப்படுத்துபவர் அல்லது புரட்சியாளர் என்று நாம் அழைக்கும் வார்த்தைகளுடன் அதிகம் உறவுபடுகிறது.

பேதுருவும் அவரது வாசகர்களும், மேற்கொள்ளும் அரசு அதிகாரம் பற்றிப் பேரார்வம் குறைந்தவர்களாக இருந்தனர் என்பதற்குக் குறிப்புகள் உள்ளன. 2:13-17ல் அப்போஸ்தலர், தமது வாசகர்கள் அரசு அதிகாரங்களை மதிப்பவர்களாகவும் கீழ்ப்படிபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுதல் அவசியம் என்று உணர்ந்தார்.[6] இது கடமையினால் கட்டுவிக்கப்பட்டிருந்த கிறிஸ்தவர்கள் எப்போதெல்லாம் முடியுமோ அப்போது ரோம அதிகாரத்தை எதிர்த்து நிற்க வேண்டும் என்று அந்தச் சிலர் நினைத்தனர் என்பதற்குக் குறிப்பாக உள்ளதா? மற்றும் 5:13ல் பேதுரு பாபிலோனில் இருந்த "சபையில்" இருந்தும் வாழ்த்துக்களை அனுப்பினார். பாபிலோன் என்பது ரோமாபுரி என்பதாகப் பேதுருவின் வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்த்திருந்தார் என்றால், ரோம உலகம் மற்றும் ரோம அரசு ஆகியவற்றைப் பற்றித் தமது மற்றும் அவர்களது கருத்துக்களைப் பற்றிய குறிப்பிடத்தக்க உரையையும் அவர் ஏற்படுத்தி இருக்க வேண்டும். பேதுருவின் வாசகர்கள் தவிர்க்கும்படி அவர் குறிப்பிட்ட நான்கு செயல்பாடுகளின் சாத்தியக்கூறு பற்றி முழு கவனம் தரப்பட வேண்டும், கடைசி வார்த்தையைக் குறித்துக் குறிப்பான அறிவுறுத்துதல் அவர்களுக்குத் தேவைப்பட்டது. மற்றும், அவர்கள் தாங்கள் எந்த அரசின்கீழ் வாழ்ந்தார்களோ அந்த அரசைக் களங்கப்படுத்தக் கூடாது என்ற அறிவுத்துதலும் அவர்களுக்குத் தேவைப்பட்டது. அந்த அரசாங்கங்கள் அவர்கள் யாவருக்கும் மிக ஆழ்ந்த வகையில் சுவையற்றதாக இருந்தாலும், நியமிக்கப்பட்ட அரசாங்கங்கள் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாகவே உள்ளன.

**வசனம் 16.** கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைக் குறிப்பிடுவதற்கு **கிறிஸ்தவன்** என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள்

காணப்படுகிறது. இங்குள்ளதைத் தவிர மற்ற இரு முறைகளும் இது நடபடிகள் புத்தகத்தில் உள்ளது. சிரியாவின் அந்தியோகியாவில் இருந்த சபையானது பெரிதும் புறஜாதி மக்களைக் கொண்ட சபை தனது இளமைப் பருவத்தில் இருந்த போது (கி. பி. சுமார் 45ம் ஆண்டு), **"முதல் முதல் அந்தி யோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று"** என்று லூக்கா பதிவு செய்தார் (நடபடிகள் 11:26). "வழங்கிற்று" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, ஆங்கிலத்தில் "called" *(chrēmatizō)* என்று உள்ளது, இது "தெய்வீகமாக அழைக்கப்படுதல்" என்று அர்த்தப்படக்கூடும். அங்கு வாழ்ந்த தீர்க்கதரிசிகளில் ஒருவர் மூலமாகத் தேவன் இந்தப் பெயரை வெளிப்படுத்தி இருக்கலாம். பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்பு, அகிரிப்பா அரசருக்கு முன்பாகப் பவுல் தற்காப்பு வாதம் செய்தார். அப்போஸ்தலருடைய கேள்விக்கு, **"நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்"** என்று அகிரிப்பா பதில் கூறினார் (நடபடிகள் 26:28). ஒருவேளை அரசர் ஏளனம ாய்ப் பேசியிருக்கலாம், ஒருவேளை இந்தக் குறிப்பானது ஒரு கேள்விச் சொற்றொடராக்கப்பட்டிருக்கலாம் அல்லது ஒருவேளை இது உண்மைத் தன்மையுடன் பேசப்பட்டிருக்கலாம். அர்த்தம் தெளிவற்றதாக உள்ளது. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கு முற்பட்ட காலம் வரையிலும், "கிறிஸ்தவர்" என்ற வார்த்தை விசுவாசிகளுக்குப் பொதுவான குறிப்புச்சொல்லாக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது. இக்னேஷியஸ் அவர்கள் தமது கடிதங்களில் பலமுறைகள் இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார்,[7] மற்றும் Didache என்ற உபதேச நூலில் இவ்வார்த்தை ஒருமுறை காணப்படுகிறது[8] - இவையாவும் பொதுவாக கி. பி. 115க்கு முந்தி எழுதப்பட்டதாகத் தேதியிடப்பட்டுள்ளன. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், டேசிட்டஸ், சுயூட்டோனியஸ் மற்றும் பிளீனி போன்ற கிறிஸ்தவரல்லாத இலத்தீன் எழுத்தாளர்களும் இவ்வார்த்தையைத் தாராளமாகப் பயன்படுத்தினர். "கிறிஸ்தவர்" என்பது தொடக்க நாட்களில் புறதெய்வ வணக்கத்தவர்களால், அவப்பெயர் என்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். எப்படியிருந்தாலும், விசுவாசிகள் தயக்கமின்றி இப்பெயரைத் தழுவிக்கொண்டனர்.

இதில் வெட்கம் ஒன்றுமில்லை, மாறாக ஒருவர் கிறிஸ்தவர் என்ற வகையில் துன்புற வேண்டும் என்ற போது, அதில் ஆசீர்வாதம் உள்ளது. பேதுரு தமது வாசகர்கள், ஒரு மார்க்கத்தை எடுத்துக் கொண்டதிலும், அதை வாழ்வின் வழியாக்கிக் கொண்டதிலும், இடர்ப்பாடான நிலையில் இருந்தனர், அது அவர்கள் சமகாலத்தில் வாழ்ந்தவர்களிடம் அவர்கள் வினோதமானவர்களாகவும் சமூக உறவு அற்றவர்களாகவும் தோன்றும்படி செய்திருந்தது என்பதை அறிந்திருந்தார். பழங்கால மக்களாக இருந்தாலும் சரி, நவீனகால மக்களாக இருந்தாலும் சரி, மார்க்கம் என்பது மக்களின் வாழ்வில் மிகவும் பழமைத்துவமான சக்திகளாக இருந்துள்ளது. புதிய ம ார்க்கத்தைத் தழுவிக்கொள்பவர்கள் சந்தேகம் மற்றும் அவநம்பிக்கைக்கு இலக்காகும் முதன்மை மக்களாக இருக்கின்றனர். சமூகத்தீமைகள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஆகியவையும்கூட அவர்களின் வீட்டுவாசற்படிகளில் போடப்பட்டன. ஒருவர் பாடு அனுபவிக்க வேண்டும் என்றால் அது எதி

ர்பார்க்கப்பட வேண்டும் என்று பேதுரு கூறினார். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், தவறு செய்ததாக மற்றவர்கள் எவரும் நியாயமாகக் குற்றம்சாட்ட இயலாதபடிக்கு, நமது வாழ்வை மிகவும் உதாரணத்துவம் உள்ளதாகக் காத்துக்கொள்ள வேண்டும். நமது ஒழுக்கரீதியான வாழ்வில், நமது குடிமைப் பொறுப்புகளில், நமது அரசு அதிகாரிகளுக்கு மதிப்பு அளிப்பதில், நமது குடும்ப வாழ்வில் - நாம் செய்யும் எல்லாவற்றிலும் நாம், பிறர் நம்மை வெறுர்க்க அல்லது தவறாக நடத்தக் காரணம் எதையும் எவருக்கும் விட்டுவிடக் கூடாது. இவையாவற்றையும் நாம் செய்திருக்கும் நிலையில் பாடு அனுபவித்தால் நாம் **வெட்கப்பட வேண்டியதில்லை.**

கிறிஸ்தவர் துன்புற வேண்டி இருக்கும்போது, **அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்** என்பதே அவரது பதில் செயலாக இருக்க வேண்டும். அவரது அறிக்கையும் அவரது நடக்கையும் உலகத்தின் மீது ஒரு செயல்தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதற்குத் துன்புறுதல் ஒரு சாட்சியமாக உள்ளதால் அவர் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும். இயேசு, **"எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்"** என்று கூறினார் (லூக்கா 6:26). உலகத்தின் நம்பிக்கைகளும் நடத்தையும் உள்ளாகப் பயமுறுத்தும் கொள்கைளின்மீது ஒருவர் தமது வாழ்வை உருவாக்கியிருக்கும்போது, எதிர்ப்பு எதையும் காணக்கூடாது என்று எவரும் எதிர்பார்க்க இயலாது. தன்னில் தானே ஒரு முடிவு என்றவகையில் பாடு அனுபவித்தல் என்பது மதிப்புள்ளதாக இருப்பதில்லை; தேவபக்திக்காகச் சாட்சியாயிருத்தல் என்ற வகையில் பாடு அனுபவித்தல் என்பது "தேவனை மகிமைப்படுத்த" ஒரு வாய்ப்பாக உள்ளது. இது மனிதர் மத்தியில் தேவனுடைய இராஜ்யம் உணர்ந்தறியப்பட்டுள்ளது என்று அர்த்தப்படுகிறது.

4:14ல் பேதுரு, "கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்" நிந்திக்க அல்லது கடிந்து கொள்ளப்படுபவர்கள் பாக்கியவான்கள் என்று உரைத்திருந்தார். அவர் தேவனை மகிமைப்படுத்த வேண்டிய "இந்த நாமம்" என்பது, கிறிஸ்துவின் பெயருக்கு ஒரு குறிப்பாக உள்ளதா அல்லது ஒருவேளை இது தேவனுடைய நாமத்திற்கே ஒரு குறிப்பாக உள்ளதா? சாத்தியக்கூறான வகையில் கையில் மிக நெருக்கமாக உள்ளது "கிறிஸ்தவன்" என்ற நாமமே ஆகும். பேதுருவின் குறிப்பு, கி. பி. 60களின் மத்தியின்போது, விசுவாசிகள் இந்த நாமத்தைத் தழுவத் தொடங்கி மாத்திரம் இருந்தனர் என்று கருத்துத் தெரிவிக்கிறது. இந்தப் புதிய மார்க்கத்தைப் பற்றிக்கொண்டு இதனைப் பின்பற்றியவர்களை முற்றிலும் விரோதத்துடன் கண்ணோக்கிய யூதர்களும் புறதெய்வ வணக்கத்தவர்களும் இருந்தனர். அவர்களுக்கு "கிறிஸ்தவர்" என்ற வார்த்தை, அவிசுவாசத்துடன் தலையைக் குலுக்குதலை அல்லது முகத்தில் கோபம் கொப்பளிக்கக் கண்ணோக்குவதை விளைவித்தது. பேதுருவுக்கு, இது வெட்கப்படக் காரணமாக இருக்கவில்லை. "இந்த நாமத்தில்" விசுவாச அறிக்கைக்காகப் பாடு அனுபவிக்கும்போது அவரும் அவரது வாசகர்களும் தேவனை மகிமைப்படுத்துவார்கள்.

# உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு ஆத்துமாவை ஒப்புக்கொடுத்தல் (4:17-19)

**17நீயாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? 18நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? 19ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.**

நிகழ்காலம் பாடு அனுபவித்தலைத் தவிர்க்க இயலாதது ஆக்குகிறது; எதிர்காலம் மகிமையை வாக்குத்தத்தம் செய்கிறது. காலத்தின் முடிவு பற்றிய அப்போஸ்தலரின் வேண்டுகோளோ, கிறிஸ்தவத் துன்பங்களுக்கு அவரது சீர்பொருத்தமான பதிலாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் இறுதிநாள் பற்றிய கோட்பாடு, கிறிஸ்தவ வாழ்வின் நிகழ்கால வற்புறுத்துதல்கள் மற்றும் வரவிருக்கும் காலத்தில் உள்ள வாழ்வின் நம்பிக்கை ஆகியவற்றிற்கு உதவுகிறது. பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும், வரவிருக்கும் காலம் என்பது கோட்பாட்டளவானதாக இருக்கவில்லை. அது ஏற்கனவே இந்த உலகத்தில் தொடங்கி இருந்தது, கர்த்தருடைய வருகை சமீபமாக இருந்தது (4:7).

**வசனம் 17.** புதிய ஏற்பாட்டில் பரலோக இராஜ்யம் தற்கால யுகத்தில் தொடங்கி வளரும் நிலையில் இருக்கையில் அதைப் பற்றிய உணர்வறிவுடன் விசுவாசிகள் வாழ்ந்தனர், இராஜ்யத்தைப் பற்றிய முழுமையான உணர்ந்தறிதல் விரைவில் அவர்கள் மீது இருக்கும். மற்றும், அக்காலத்தில் தேவனுடைய இஸ்ரவேல் மக்கள் ஆயத்தமாயிருக்கும்படி, மணவாளனுக்காகக் காத்திருக்கும் "கற்புள்ள கன்னிகை" போன்று (2 கொரிந்தியர் 11:2) அவர்களைத் தேவன் நேர்த்தியாக்கிக் கொண்டும் சுத்திகரித்துக் கொண்டும் இருந்தார். **நீயாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது** என்று பேதுரு கூறினார். இந்த யுகத்தில் தேவன், தமது நற்தன்மைக்கும் பரிசுத்தத்திற்கும் சாட்சியாகப் பணி செய்யும்படி, மக்களை அழைத்து உருவாக்குவதில் அக்கறையாக இருக்கிறார் என்று பேதுரு கூறினார். கிறிஸ்தவர்கள் பாடு அனுபவிக்கும்போது, ஒரு கருத்தில் அது, தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மீது விழுந்துள்ளது என்பதாக இருந்தது. விசுவாசம் மற்றும் தேவபக்தி ஆகியவற்றிக்குப் புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டுடன் இருத்தல் என்பதே, விசுவாச நிறைவுடன் இருப்பதன் விளைவாக இருக்கும்.

ஆங்கில வேதாகமத்தில் "household" ["வீட்டார்"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, கிரேக்க மொழியில் "வீடு" (*oikos*) என்று மாத்திரமே உள்ளது என்பது கவனிக்கத் தக்கதாக உள்ளது. இந்த உருவகமானது தேவனுடைய மக்களை வீட்டார் என்று அல்ல, ஆனால் வீடு என்றே கூறுகிறது. [தமிழ் வேதாகமத்தில் இது "வீட்டிலே" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது], இதில் வேறுபாடு ஒன்றுள்ளது. பேதுரு கிறிஸ்தவர்களைத் தேவனுடைய வீட்டார் என்று அழைத்திருந்தால், அது விசுவாசிகளின் பரஸ்பரம் சார்ந்திருக்கும் தன்மையை, குடும்ப அமைவில்

இருந்து வருகிற இதமான சூழ்நிலையைச் சிந்தைக்குக் கொண்டு வந்திருக்கும். இருப்பினும், பேதுருவின் சிந்தை அவ்விடத்திற்குச் செல்லவில்லை. பேதுரு தாம், 2:5ல் பயன்படுத்தியிருந்த தேவாலய (ஆவிக்கேற்ற மாளிகை என்ற) உருவகத்தைவிட்டு விலகி வரவில்லை. விசுவாசிகள் தேவனுடைய பரிசுத்த ஆலயமாக, தேவனுடைய வீட்டிற்குள் ஒன்றாகக் கட்டப்படுகின்றனர். 1 பேதுரு நிருபத்தில் "சபை" என்ற வார்த்தை இல்லை என்றாலும்கூட, இங்கு கவனத்தில் உள்ள விஷயம் சபையே ஆகும். பவுல் 1 தீமோத்தேயு 3:15ல், **"தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே** [*oikos*] **நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச்** [*ekklēsia*] **சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது"** என்று பயன்படுத்தியது போன்றே பேதுருவும் இங்கு "வீடு" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்.

தேவன் தமது சபையில் அன்புகூர்ந்து, இஸ்ரவேல் மக்கள் மத்தியில் தாம் உலாவினது போன்றே சபையின் மத்தியிலும் உலாவுகிறார். அவர் தமது மக்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர்கள் அவருடையவர்களாக இருக்கின்றனர் என்பதற்கு, அவர்களை அவர் நியாயந்தீர்த்ததே சாட்சியாக உள்ளது. அவர்களைச் சுற்றிலும் இருந்த மக்களினத்தவர்கள் செய்த போது அவர் புறக்கணித்திருந்த அதே செயல்களைத் தமது மக்கள் செய்தமைக்காக அவர்கள் மீது அவர் சிட்சிக்கும் அக்கினியை அனுப்பினார். அந்த மக்களினங்களைப் போல் அவர்கள் ஆவதற்கு அனுமதிக்க அவர் மறுத்துவிட்டார். **"மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனைசெய்து, அஞ்ஞானிகளைப்போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே; உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை"** (எசேக்கியேல் 20:32). தேவன் இஸ்ரவேல் மக்களைப் புடமிட்டதுபோல, இப்போது தாம் அழைத்துள்ளவர்களை அவர் புடமிடுகிறார். இந்த நிருபத்தில் பேதுரு இவ்விடத்தில் மாத்திரமே "நியாயத்தீர்ப்பு" (*krima*) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார், இருப்பினும் இதன் தொடர்புடைய வினைச்சொல்லான "நியாயந்தீர்த்தல்" என்பதை அதில் அவர் பலமுறைகள் பயன்படுத்தினார். பாடு அனுபவித்தல் என்பது (1) தேவன் தமது மக்கள் மூலமாக இந்த உலகத்தின் மீது செயல்தாக்கத்தை ஏற்படுத்துகிறார் மற்றும் (2) அவர் தமது மக்களைத் தமது பரிசுத்த சாயலுக்கு ஏற்ப உருவாக்குகிறார் என்பவற்றிற்குச் சாட்சியமாயிருப்பதால், அது சந்தோஷப்படுதல் மற்றும் தேவனுக்கு மகிமை செலுத்துதல் ஆகியவற்றிற்கான சந்தர்ப்பமாக உள்ளது.

அப்போஸ்தலர், தமது வாசகர்கள் மீது தேவன் கொண்டுவரும் பாடுகளைக் காட்டிலும், கீழ்ப்படியாதவர்கள் மீது அவர் கொண்டு வரும் பாடுகள் எவ்வளவு பெரிதாயிருக்கும் என்பதை அவர்கள் (பேதுரு நிருபத்தின் வாசகர்கள்) கற்பனை செய்துகொள்ளும்படி விட்டுவிட்டிருந்தாலும், அவரது விவாதமானது சிறியதில் இருந்து பெரியதற்குச் செல்லுதலாக இருந்தது. தேவன் தாம் அன்புகூருபவர்களை நியாயந்தீர்த்துப் புடமிடுகிறார் என்றால், **தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?** தற்கால யுகத்தில் தேவன் தமது மக்களுக்குப் பாடுகளை அனுமதிக்கிறார், அவர்களைப் புடமிட்டுத் துய்மைப்படுத்துகிறார், அதே

வேளையில் அவர் கீழ்ப்படியாதவர்களைப் புறக்கணிக்கிறார். “கிறிஸ்துவின் மகிமைவெளிப்படும்போது” (4:13; மற்றும் 1:7; 5:1ஐயும் காண்க), அவர் புடமிட்டவர்களுக்கு, கற்பனைக்கு அப்பாற்பட்ட சந்தோஷம் கிடைக்கும், மற்றும் “தேவனுடைய சுவிசேஷத்திற்கு” தங்கள் முதுகைத் திருப்பிக்காட்டியவர்களுக்கு கற்பனை செய்ய இயலாத வருத்தங்கள் ஏற்படும். “தேவனுடைய சுவிசேஷம்” என்பது, தேவன் தமது வாக்குத்தத்தங்களின்படி தமது குமாரனை அனுப்பியிருக்கிறார், அந்தக் குமாரன் மனிதரின் பாவங்களுக்காக மரித்தார், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது மூலமாக, அவரைத் தமது குமாரன் என்று தேவன் அறிவித்துள்ளார் என்ற செய்தியாக உள்ளது. இது பவுலினால் 1 கொரிந்தியர் 15:1-4ல் செறிவூட்டப்பட்ட சுவிசேஷமாக உள்ளது.

**வசனம் 18.** பேதுரு நீதிமொழிகள் 11:31ஐக் குறிப்பிட்டதன் மூலம் தமது விவாதத்திற்கு மறுவலியூட்டினார். இந்தக் குறிப்பு, ஒரே சிறு பாகம் விடப்பட்டது தவிர, செப்துவஜிந்த் வேதாகமத்தில் (LXX) இருந்து சொல்லுக்குச் சொல் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது. இது, பேதுரு தமது கருத்தை ஆதரித்து நிற்கும்படி கூடுதலாக இணைத்த, பேதுருவின் பிந்திய சிந்தனையாக இருந்திருக்க வாய்ப்பில்லை. 4:12ல் தொடங்கிய சிந்தனைச் சங்கிலியுடன் அப்போஸ்தலர் இவ்வசனத் தொடக்கத்தில் வழிநடத்தப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இவ்வாழ்வில் துன்புறுதல் என்பது தேவனுடன் ஜீவனில் இருக்கும்படி தேர்ந்து கொண்ட மக்களை அடிப்படையாக ஆயத்தப்படுத்துகிறார் என்பதற்கு நிரூபணமாக இருந்தது, கீழ்ப்படியாதிருந்த மக்கள் அதிகம் கடுமையாகத் துன்புறும்படியான நிலையை நியாயத்தீர்ப்பு விளைவிக்கும்.

KJV வேதாகமம் இவ்வசனத்தை, “நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?” என்று மொழிபெயர்க்கிறது. இவ்வார்த்தை அமைப்பு தன்னில்தானே தவறான புரிந்துகொள்ளுதலுக்கு வழிநடத்துகிறது. நீதிமானே இரட்சிக்கப்படுவது மிகவும் கடினம் என்ற இவ்வசனப்பகுதியை வாசகர் (தவறாகப்) புரிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட கருத்து எதையும் ஏற்படுத்தப் பேதுரு விரும்பவில்லை. மாறாக அவர், நீதிமான் இரட்சிக்கப்படுவதற்கு, கடினமான காலங்களினூடே வாழ்ந்தாக வேண்டும் என்றே கூறினார். தேவனுடைய மகிமை வெளிப்படுகிறபோது மற்றும் அவரது நியாயத்தீர்ப்பு நடைபெறுகிறபோது, துன்புறுதல் என்பது எதிர்பார்க்கப்பட்டது. விஷயம் அவ்வாறு இருந்ததால், அவர் சொல்லாடற்கலை மிகுந்த பின்வரும் கேள்வியை முன்வைத்தார்: “தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு தேவன் எவ்வளவு அதிகம் முனைப்பான துன்புறுதலை வைத்திருப்பார்? என்று ஒருவர் யூகிக்கலாம்.” முடிவில் நீதிமான்கள் இரட்சிக்கப்படுவார்கள். அந்த வாதத்தில் சந்தேகம் எதுவும் இல்லை. **பக்தியில்லாதவனும் பாவியும்** ஆக உள்ளவர்களுக்குத் தேவன் வைத்துள்ள பாடுகளின் அளவு நிச்சயமற்றதாக உள்ளது. இவ்வசனத்தில் வரும் பக்தியில்லாதவரும் பாவியும் என்பவர்கள், முந்திய வசனத்தில் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத அதே மக்களாகவே உள்ளனர். நீதிமொழிகளில் இருந்து வருகிற வசனப்பகுதி, நிறைவில் விடுவிக்கப்படும் விசுவாசிகளுக்கு உடனடி ஊக்குவிப்பைத் தரும்

வார்த்தையாகவும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு எச்சரிப்பு வார்த்தையாகவும் உள்ளது.

**வசனம் 19.** புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் போன்றே, பரவசவியல் என்பது ஒழுக்கத்திற்கு உதவுகிறது. கர்த்தருடைய மறுவருகை மற்றும் பரிசுத்தவான்களையும் பாவிகளையும் அவர் நியாயந்தீர்த்தல் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பிடுதல், தேவனுடைய மக்களுக்கு இந்தக்காலத்தில் இருக்க வேண்டிய பரிசுத்தம் பற்றிய நினைவூட்டுதலாகச் செயல்படுகிறது. விசுவாசிகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறாரோ, அவ்வகையான மக்களாக இருப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை அவர்கள் இரட்டிப்புச் செய்யட்டும். பேதுரு தமது இரண்டாம் நிருபத்தில், பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு கடைசி நியாயத்தீர்ப்பு பற்றிய விரிவான விளக்கத்தை உரைக்கத் தொடர்ந்தார்; "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2 பேதுரு 3:11).

இயேசு பாடு அநுபவித்தபோது, தேவபக்தியற்றவர்களால் அவர் வையப்பட்டபோது, அவர் "நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:23). அவரது சீஷர்களும் அதையே செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். **தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவித்தல்** என்பது, இயேசு குற்றம் செய்யாமலே பாடு அனுபவித்தது போன்று, நாமும் குற்றம் செய்யாமலிருக்கும்போதே பாடு அனுபவித்தலாக உள்ளது. தேவன் தம்மிடத்தில் ஆத்துமாக்களை ஒப்புவிப்பவர்கள் பாடு அனுபவித்தலை அரிதாகவே விரும்புகிறார், அதுவே முடிவாக இருப்பதில்லை. பாடு அனுபவித்தல் என்பது தேவனுடைய சித்தமல்ல, மாறாக அவரது பரிசுத்தவான்களின் வாழ்வானது, இந்த உலகத்தை அச்சுறுத்துவதாக, உலகத்தாரின் தேவபக்தியற்ற நடக்கையின் பின்னனியில் அவர்களின் பாவங்களைக் காட்சிப்படுத்துவதாக உள்ளது. பரிசுத்தவான்கள் அவ்வாறு செய்யும்போது, அவர்களுக்கு உலகத்தார் துன்பம் தருகின்றனர். இப்படிப்பட்ட துன்புறுதல் "தேவனுடைய சித்தத்தின்படி" யானதாகவே இருக்கிறது. இந்த துன்புறுதல் கொஞ்சக்காலமே இருக்கிறது. இந்த சூழ்நிலைகளின்கீழ் விசுவாசிகள் துன்புறும்போது தேவன் மகிமைப்படுகிறார்.

கிறிஸ்தவர்கள் தேவனுடைய மகிமை வெளிப்படுதலை முன்னெதிர்நோக்கி வாழ்வதால், அது விரைவில் நடக்கவிருப்பதால், அவர்கள் கிறிஸ்துவைப் போன்றே, **தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கின்றனர்.** இங்கு "ஆத்துமாக்கள்" என்பது அவர்களின் நபர்த்துவத்தை மாத்திரம் குறிப்பதாக உள்ளது. "ஆத்துமா" என்பது "சரீரத்திற்கு" எதிராக அமைக்கப்பட்டிருப்பதில்லை. "ஒப்புவித்தல்" *(paratithēmi)* என்ற வினைச்சொல், இயேசு சிலுவையில் தொங்கிய போது கூறிய "பிதாவே. உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்ற வசனத்தில் பயன்படுத்திய அதே வார்த்தையாக உள்ளது (லூக்கா 23:46). இருப்பினும் பேதுரு தமது சிந்தையில் இயேசுவின் இக்கூற்றைக் கொண்டவராக இவ்வார்த்தையைத் தேர்ந்தெடுத்து இருப்பாரா என்பது உறுதிப்பாட்டிற்குத் தொலைவில் உள்ளது. அப்போஸ்தலரின் வாசகர்கள், **நன்மைசெய்கிறவர்களாய்** "தங்கள் ஆத்துமாக்களை ஒப்புவிக்க" வேண்டும்

*என்பதே அவருக்கு முக்கியமான விஷயமாக இருந்தது.*

*பழைய ஏற்பாட்டில், படைப்பில் தேவனுடைய பணிப்பொறுப்பு என்பது பொதுவான ஆய்வுக்கருத்தாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மாத்திரமே தேவன்* ***"சிருஷ்டிகர்த்தா"*** *என்று அழைக்கப்பட்டுள்ளார் என்பதைக் கவனித்தல் வியப்புக்குரியதாக உள்ளது. அண்டத்தையும் மனிதகுலத்தையும் படைத்திருந்த ஒருவர், கீழ்ப்படியாதவர்களுக்கு நியாயத்தீர்ப்பு தர வல் லவராக இருந்தார் என்பதன் நிச்சயத்தைப் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டவே, இங்கு தேவனை சிருஷ்டி கர்த்தர் என்று அழைத்திருக்க வாய்ப்புள்ளது. அவர் "உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாக" இருக்கிறார் என்பது மறு உறுதிப்பாட்டை அளிக்கிறது. தேவன் தமது வாக்குத்தத்தங்களில் ஒருக்காலும் தவறியது இல்லை. "உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தர்", தமது சொந்த மக்களை மீட்கவோ அல்லது தமது நாமத்தை அணிந்துள்ளவர்களை அநீதியாகத் துன்புறுத்துபவர்களை நியாயத்தின் முன்பு கொண்டு வரவோ ஒருக்காலும் தவற மாட்டார்.*

*தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெகுவிரைவில் வெளிப்பட வேண்டும் என்று பேதுருவும் அவரது வாசகர்களும் எதிர்பார்த்தனர். புதிய ஏற்பாட்டு சூழல் முழுவதிலும் எதிர்பார்ப்பு உள்ளது. அந்த எதி ர்பார்ப்பு உணர்ந்தறியப்படாமலேயே அவர்கள் வாழ்ந்து மரித்தனர். இந்த யுகம் உட்பட, ஒவ்வொரு யுகத்திலும் உள்ள விசுவாசிகள், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் வாழ்ந்த தங்கள் சகோதர சகோதரிகளைப் போன்று செயல்பட வேண்டும் என்றால், (நாம் உட்பட) அவர்களும் அதே எதிர்பார்ப்புடன் வாழ வேண்டும். பேதுருவின் வாசகர்களுடைய வாழ்நாள் காலத்தின்போது, தேவன் நியாயத்தீர்ப்பு தரும்படி தோன்றவில்லை என்பதால். அவர் தமது வாக்குத்தத்தத்தில் தவறிவிட்டார் என்று இது கூறுவதில்லை. கிறிஸ்தவ வாழ்வின் வழிகாட்டும் நட்சத்திரமாக விளங்குவது, உணர்ந்தறிதல் அல்ல, ஆனால் எதிர்பார்ப்பே அவ்வாறு விளக்குகிறது. தேவன் சொந்தமாகத் தேர்ந்து கொண்ட ஒருநாளிலே, வரலாறு முடிவுக்கு வரும். கர்த்தர் வெளிப்படுவார். அந்த வேளைய எப்போது வரும் என்பது தேவன் தீர்மானிக்க வேண்டிய விஷயமாக உள்ளது. அவரது மக்களில் ஏராளமானவர்கள் எதிர்பார்ப்பில் வாழ வேண்டியுள்ளது. நூற்றாண்டுகள் கடந்து போகும் நிலையில் அந்த எதிர்பார்ப்பைப் புதியதாகக் காத்துக்கொள்ளுதல் கடினமாக உள்ளது என்று சிலர் விவாதிக்கலாம். இயேசுவைத் தங்கள் வாழ்வில் துணைவராக ஏற்படுத்திக் கொண்டு, அவரது நாமத்திற்காகப் பாடு அனுபவிப்பவர்களின் விஷயத்தில் இவ்வாறு நடப்பதில்லை. பாடு அனுபவித்தல் என்பது கர்த்தர் திரும்பவும் வருவார் என்பதற்கு அவரது சாட்சியமாக உள்ளது. கர்த்தர் மறுபடியும் வருவார் என்று எதிர்பார்த்தலுக்கும், கர்த்தர் விரைவில் திரும்ப வருவார் என்று எதிர்பார்த்தலுக்கும் இடையில் பெரிய வேறுபாடு உள்ளது. பிந்தி ய எதிர்பார்பே விசுவாசிகள் உண்மையுடனும் சகிப்புத்தன்மையுடனும் இருக்கும்படி அவர்களைத் தூண்டுகிறது.*

## குறிப்புகள்

[1]J.இராம்ஸே அவர்களால் ஏற்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டிற்கு நேர்மாறான வகையில், *4:12*ம் வசனத்தின் அவசரத்தன்மையை ஒப்பிடும்போது, *1:6-9* வசனப்பகுதியின் வலிவுத்தன்மையானது, *4:7-11* வசனப்பகுதியில் உள்ள கனிவான புத்திகூறுதல்கள் மற்றும் துதி ஆகியவற்றின்மீது சிறிதளவே தொடர்பு கொண்டுள்ளன. *4:12*ம் வசனம் தொடங்குகையில் எச்சரிப்பின் எதிர்பாராத முன்னுரை ஒன்றுள்ளது. காண்க J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 258. [2]Pliny *Letters* 10.96. [3]Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. (London: Macmillan & Co., 1947; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 222–24. [4]Michaels, 264–65. [5]Ibid., 267. [6]அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்ற புத்திமதி, இலக்கியத் தொனியைப் பேதுரு தழுவிக் கொண்டார் என்பதால் நீக்கப்பட இயலாது. பழங்கால உலகத்தில் வீட்டாருக்குரிய சட்ட முறைமைகளின் தொனி பற்றி கணிசமான அளவு நிச்சயமற்ற தன்மை உள்ளது. ஆனால் இந்தத் தொனியைப் பேதுரு பயன்படுத்தினார் என்று நாம் எடுத்துக்கொண்டால், அவர் தமது வாசகர்கள், கிறிஸ்தவ நடக்கை கொண்டு தங்கள் சமூக உலகில் போராட்டங்களைச் சந்திக்கையில் அவர்களுக்குப் புத்திகூறுவதற்கு ஏற்புடையவையாக இருந்த சட்டமுறைமைகளின் கூறுகளைத் தேர்ந்தெடுத்தார். [7]For example, Ignatius *Romans* 3.2; *Magnesians* 4.1; *Ephesians* 11.2. [8]*Didache* 12.4.